# விவசாயத்திற்கு ஆதரவாக போராடினால் குண்டர் சட்டம் பாயுமா?

## விரிவான விளக்கம் அளிக்க மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, அக்.15-

தென்காசி மாவட்டம் ஆத்துவழி கிராமத்தைச் சேர்ந்த சுனிதா, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த அவசர மனுவில், எனது கணவர் ஜெயராமன் என்ஜினீயர் ஆவார். இவர் திருமங்கலம்-ராஜபாளையம், தென்காசி-செங்கோட்டை பகுதியில் 4 வழிச்சாலை திட்டத்தை அமல்படுத்தினால் விவசாயம் கடுமையாக பாதிக்கும் என்பதால் வேறு பகுதி வழியாக அமைக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு ஆதரவாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார். இந்த நிலையில் கடந்த மாதம் 14-ந்தேதி என் கணவர் மீது கிராம தலையாரி கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர் மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின்கீழ் கைது செய்ய தென்காசி மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது. அவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்க முகாந்திரமும் இல்லை. கலெக்டரின் இந்த உத்தரவை ரத்து செய்து, எனது கணவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஒப்படைக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கை நீதிபதிகள் நிஷாபானு, ஆனந்த் வெங்கடேஷ் ஆகியோர் முன்பு அவசர வழக்காக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் சார்பில் வக்கீல்கள் ஹென்றிடிபென், கருணாநிதி ஆகியோர் ஆஜராகி, மனுதாரரின் கணவர் அமைதியான முறையில் போராடி வருகிறார். விவசாய பகுதியில் சாலை அமைப்பதற்கு எதிரான போராட்டத்தின் காரணமாக அவர் மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது ஏற்புடையதல்ல என்று வாதாடினார்கள்.

இதையடுத்து நீதிபதிகள், மனுதாரர் கணவரை எதன் அடிப்படையில் குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்தீர்கள்? விவசாயத்திற்கு ஆதரவாக போராடினால் குண்டர் சட்டம் பாயுமா? என அரசு தரப்பு வக்கீல்களிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அரசு வக்கீல்,, இதுகுறித்து பதில் அளிக்க அவகாசம் தர வேண்டும் என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், வழக்கு ஆவண ஆதாரங்களை பார்க்கும்போது மனுதாரர் கணவர் மீது குண்டர் சட்டம் பாய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. மனுதாரரின் கணவர் சிறையில் அடைக்கப்பட்டதற்காக அரசு இழப்பீடு வழங்கவேண்டி வரும். எனவே இதுகுறித்து விரிவான அறிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு நவம்பர் 7-ந்தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது, என்றனர்.